# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 35/ந/2026, நாள் 21.05.2026

C.ஹரிபாபு,
ஆவடி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி,
ஆற்காடு. – எதிர்மனுதாரர்

சென்னை, ஆவடி IAF, மிட்டணமல்லி, ஹைஸ்கூல் தெரு, எண்.21, என்ற முகவரியில் வசிக்கும் திரு. C.ஹரிபாபு என்பவரது 20.01.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.01.2026 அன்று பெறப்பட்டு, 35/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, ஆவடி IAF, மிட்டணமல்லி, ஹைஸ்கூல் தெரு, எண்.21, என்ற முகவரியில் வசிக்கும் திரு. C.ஹரிபாபு என்பவரது 20.01.2026 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு நகராட்சிக்கு உட்பட்ட பகுதி வார்டு–ல் ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டெல் வணிக வளாகம் பல அடுக்கு கட்டிடம் முகவரி No.12 A அறிஞர் அண்ணா சாலை, ஆற்காடு ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் வணிக வளாகம் (LAND MARK பாண்டியன் ஹோட்டல் எதிரில் & ஆற்காடு கமல் சில்க்ஸ் துணிக்கடை எதிரில்) தேவமணி ஸ்டுடியோ பக்கத்தில் கட்டப்பட்டு வரும் ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டெல் வணிக வளாக கட்டிடம் விதிமீறல் கட்டிடங்கள் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக வணிக வளாக கட்டிடம் கட்டப்பட்டு பணிகள் முடிக்கும் நிலையில் உள்ளன.

ஆற்காடு நகராட்சி ஆணையர் & நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் கடந்த 5 மாதங்களாக வணிகவளாகம் கட்டிடம் மீது நடவடிக்கை எடுக்காமல் கையூட்டு வாங்கிக்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. சட்டம் & அரசு ஆணைகள் தெரிந்தும் நகரமைப்பு அதிகாரிகள் சட்டத்தை காற்றில் பறக்கவிடுகின்றனர். இவர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வணிக வளாகம் கட்டிடத்தை சுற்றிலும் அரசு சட்ட விதிகள் படி இடைவெளி விடவேண்டும். வணிக வளாகம் கட்டிடம் இடைவெளி விடாமல் கட்டப்பட்டுள்ளது. இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு

பார்க்கிங் வசதி இல்லை. வரும் வாகனங்கள் சாலையில் தான் நிற்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் வணிக வளாகம் கட்டிடம் பொதுமக்கள் கூடும் கட்டிடம் என்பதால் 1973 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு இயக்கத்தால் முறையான அனுமதி பெறவில்லை. (Directorate of Town and Country Planning) பொது மக்கள் கூடும் கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிமம்) 1965–ன் பிரிவு 2(8)ன்படி Section 2(8) of the Tamil Nadu Public Building (Licensing) Act, 1965–ன்படி உரிமம் பெறவில்லை. வணிக வளாக கட்டிடம் அனுமதி இல்லாமல் மற்றும் கட்டிடங்கள் இடைவெளி சுற்றிலும் விடாமல் பார்க்கிங் வசதி நிறுத்துவதற்கு இடம் இல்லாமலும் 1965ன்படி உரிமம் பெறாமலும் ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் கடை பலஅடுக்கு மாடி வணிக வளாகம் கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடத்தை அகற்றியும் (remove) நகர் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56(1) மற்றும் உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 85ன் கீழ் Stop work notice/Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் (Lock and seal and demolition notice) அமலாக்க நடவடிக்கை 2 மாதங்களில் எடுக்கவும் உத்தரவிடுமாறு மிக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகராட்சியில் அனுமதி இல்லாமல் கடந்த 2023–2025 டிசம்பர் வரை நகரமைப்பு பிரிவில் பராமரிக்கப்படும் அனுமதியற்ற கட்டிட பதிவேட்டில் உள்ள விவரங்களை விசாரணை செய்து அதன் மீது நடவடிக்கை எடுக்குமாறு & அனுமதியற்ற கட்டிடங்கள் மீது நோட்டீஸ் வழங்கியதின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசாணை நிலை எண் 73/2018 நாள் 11.06.2018ல் பொது மக்களின் குறைதீர் மனுக்கள்மீது நடவடிக்கை வெளியிடப்பட்ட அரசாணை, தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் அத்தியாயம் 22யில் பத்திரிக்கை 167 பிரிவு (II) திருத்தம் செய்யப்பட்ட அரசாணை, நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சுற்றறிக்கை ந.க.எண்.21335/2021/எம்2, நாள் 24.09.2024, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை Rc.No.3555/2025/TP3 நாள் 15.05.2025 Orders of the Hon'ble Supreme Court of India, petition for special leave appeal (C ) Nos.12199-12200/2025 நாள் 30.04.2025 மற்றும் Housing & Urban development (UD4-1) department G.O.(M.S) No.289 dt. 16/12/2010 from the Commissioner of Town and country planning letter Rc.No.12249/2009 dt. 14.09.2009-ல் கண்டுள்ள உத்தரவுப்படி ஆற்காடு நகராட்சி ஆணையர் & நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் விதிமீறல் உள்ள வணிகவளாக கட்டிடம் மீது நடவடிக்கை எடுக்காமல் சட்டத்தை காற்றில் பறக்க விட்டு வருகிறார்கள். மறைமுகமாக லஞ்சம் வாங்கிக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசு உத்தரவுகளை மதிப்பதில்லை. தமிழ்நாடு அரசாணை நிலை எண் 73/2018 நாள் 11.06.2018ல் பொது மக்களின் குறைதீர் மனுக்கள்மீது நடவடிக்கை வெளியிடப்பட்ட அரசாணை, தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் அத்தியாயம் 22–ல் பத்திரிக்கை 167 பிரிவு (II) திருத்தம் செய்யப்பட்ட அரசாணை, நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சுற்றறிக்கை ந.க.எண்.21335/2021/எம்2, நாள் 24.09.2024, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை Roc.No.3555/2025/TP3 நாள் 15.05.2025 Orders of the Hon'ble Supreme Court of India, petition for special leave appeal (C ) Nos.12199-12200/2025 தேதி 30.04.2025 மற்றும் Housing & Urban development (UD4-1) department G.O.(M.S) No.289 dt. 16/12/2010 from the Commissioner of Town and country planning letter Roc.No.12249/2009 dt. 14.09.2009-ல் கண்டுள்ள உத்தரவுப்படி வணிக வளாகம் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்கள் என் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சட்டத்திற்கு விரோதமான விதி மீறல்கள் உள்ள வணிக வளாகம் கட்டிடங்கள் மீது locking and seal நோட்டீஸ் வழங்கி 2 மாதத்திற்குள் வணிக வளாகம் கட்டிடம் மீது சீல் வைக்குமாறு தாழ்மையுடன்

கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டத்திற்கு விரோதமான விதிமீறல் உள்ள வணிக வளாகம் கட்டிடங்களின் புகைப்படம் இத்துடன் இணைத்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆற்காடு நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) நகராட்சி ஆணையர் 27.02.2026 நாளிட்ட கடிதம் ந.க.எண்.284/2026/எப்1–ல் தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

"ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் வணிக வளாகம் விதி மீறி கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். கட்டிட உரிமையாளர் திருமதி.மாலதி க/பெ.ஆறுமுகம் என்பவர் சர்வே வார்டு C பிளாக் 4, நகரளவு எண்கள் 3/2, 4/1, 7/4B. 7/5B, 7/6B, 7/7B மற்றும் 7/9C மொத்த பரப்பளவு 200 சதுர மீட்டர் (2152.78 சதுர அடி இடத்தில் கடை கட்டிடம் கட்ட உத்தேச வரைபடத்திற்கு அனுமதி கோரி, பிழை திருத்தல் பத்திர ஆவணம் எண் 6182/2009, சர்வே வரைபடம் மற்றும் சர்வே பதிவேடு நகல் இணையதள வில்லங்கம் சான்றிதழ் போன்ற முக்கிய ஆவணங்களை நகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, கூராய்வு கட்டணம் ரூபாய் 370/– மற்றும் பதிவுக்கட்டணம் ரூபாய் 500/– ஆகிய தொகைகளை பற்றுச்சீட்டு எண்.025/CP/24-25/0001512 நாள் 17.12.2024இல் செலுத்தியுள்ளார்.

மற்றொரு பத்திர ஆவணம் எண்.3617/2019, சர்வே வார்டு C பிளாக் 4, நகரளவு எண்கள். 4/2, 5/1, 7/9D மொத்த பரப்பளவு 198.0 சதுர மீட்டர் (2130.48 சதுர அடி) கொண்ட இடத்தில் கடை கட்டிடம் கட்ட உத்தேச வரைபட அனுமதி கோரி, 025/CP/24–25/0001513இல் கூராய்வு கட்டணம் ரூபாய் 370/– மற்றும் பதிவுக்கட்டணம் ரூபாய் 500/– நாள் 17.12.2024–ல் நகராட்சி இணையதளம் வாயிலாக தொகை செலுத்தியுள்ளார்.

மக்கள் குறைதீர்வு நாள் மனு TN/HUD/VEL/P/PORTAL/17/DEC 25/16972776ல் திரு.C.ஹரிபாபு, ஆவடி, சென்னை என்பவரின் மக்கள் குறை தீர்வு நாள் TN/HUD/VEL/P/PORTAL/17/DEC25/16972776 மனுவில், ஆற்காடு நகர அண்ணாசாலை, கதவு எண் 12A, ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் வணிக வளாக கட்டிடம் விதிமீறல் செய்து, சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ளதாகவும், அக்கட்டடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971 சட்டப்பிரிபு 56 மற்றும் 57 பிரிவுகளின் கீழ் நோட்டீஸ் வழங்கி Lock & seal நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராணிப்பேட்டை அவர்களின் கடிதம் ந.க.எண்.11/2024/ரா மா, நாள் 06.01.2026ல் கட்டிட விதி மீறல் செய்து சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ள ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் வணிக வளாக கட்டடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971 சட்டப்பிரிவு 56 மற்றும் 57 பிரிவுகளின் கீழ் நோட்டீஸ் வழங்கி Lock & Seal நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கப்பட்ட மனுதாரரின் உத்தேச வரைபடத்திற்கு, TNCDBR–2019 கட்டிட விதிகளின்படி கூராய்வு செய்யப்பட்டு, கட்டிட உரிமையாணை கட்டணங்கள் கேட்பு (Building License Fees Demand) க்கான தொகை இணையவழியாக மனுதாரரால் செலுத்தப்பட்ட பின்பு, கட்டிட அனுமதி எண்.025/BL/2025/00005இல் தரைதளம் 995.94 சதுர அடி மற்றும் முதல் தளம் 995.94 சதுர அடி அளவில் அனுமதித்து கடை கட்டிடத்திற்கான உத்தேச வரைபட அனுமதி இணையதளம் வாயிலாக அனுமதிக்கப்பட்டது.

மற்றொரு பத்திர ஆவணம் எண்.3617/2019 சர்வே வார்டு C. பிளாக் 4, நகரளவு எண்கள் 4/2/ 5/1, 7/9D மொத்த பரப்பளவு 198.0 சதுர மீட்டர் (2130.48 சதுர அடி) இடத்தில் கடை

கட்டிடம் கட்ட திருமதி.மாலதி க/பெ.ஆறுமுகம் என்பவர் சர்வே வரைபடம் மற்றும் சர்வே பதிவேடு நகல், இணையதள வில்லங்கம் சான்றிதழ் ஆகியவைகளை நகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து உத்தேச கடைகட்டிட வரைபட அனுமதி கோரி மனுதாரரால் விண்ணப்பிக்கப்பட்டது. இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கப்பட்ட உத்தேச வரைபடத்திற்கு TNCDBR 2019 கட்டிட விதிகளின்படி கூராய்வு செய்யப்பட்டு, கட்டிட உரிமையாணை கட்டணங்கள் இணையவழியாக செலுத்தப்பட்ட பின்பு, கட்டிட அனுமதி எண் 025/BL/2025/00006ல் தரைதளம் 995.25 சதுர அடி மற்றும் முதல் தளம் 995.25 சதுர அடி அளவில் கடை கட்டிடத்திற்கான உத்தேச வரைபட அனுமதியும் வழங்கப்பட்டது.

நகராட்சி இணையதளம் வாயிலாக திருமதி.மாலதி க/பெ.ஆறுமுகம் என்பவருக்கு வழங்கப்பட்ட இரு வேறு கடைகளின் உத்தேச கட்டிட வரைபட அனுமதிகளுக்கு மாறாக, இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் parking செய்வதற்கேற்ப Basement Floor-டன் ஒரே கடை கட்டிடமாக கட்டப்பட்டு வருவதின் மீது, 1998 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135 (1) பிரிவின் கீழ் அறிவிப்பும் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம், 1971, சட்டப்பிரிவு 56 பிரிவு (விதி எண்.3 (b)இன் கீழ் அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டிடத்தினை அனுமதிக்கப்பட்டபடி மாற்றி அமைக்க கோரும் அறிவிப்பும், கட்டிட உரிமையாளருக்கு நகராட்சி அலுவலக ந.க.எண்.284/2026/எப்1, நாள் 28.07.2025–ல் அறிவிப்பு கடிதம் அனுப்பி நடவடிக்கையில் உள்ளது என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது".

4) மனுதாரர், எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் கட்டிட உரிமையாளர் ஆகியோரை 27.03.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) இதனிடையில் மனுதாரர் தனது 23.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"எனக்கு தெரிந்த நபரின் தகவல் அடிப்படையில் முறையீட்டு மனு எண்.35/ந/2026–ஐ தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திங்கள் தின மக்கள் குறை தீர்வு மனு ஆகியவற்றில் ஆற்காடு நகர Ward-C, Block No.4, T.S.No.3/2, 4/1, 7/4B, 7/5B, 7/6B, 7/7B, 7/9Cல் எண்.20 அறிஞர் அண்ணா சாலையில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் கட்டிடத்திற்கு வாகன நிறுத்துமிடம் இல்லை என புகார் மனுவில் தெரிவித்திருந்தேன். கட்டிடத்தில் Basement Floor வாகனம் நிறுத்துமிடமாக அமைக்கப்பட்டுள்ளது என்பதனை நேரில் கண்டறிந்தேன். எனக்கு தெரிந்த நபரின் தவறான வழிகாட்டுதலின் அடிப்படையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மற்றும் அவர்களுக்கு தவறான தகவல் அளித்து விட்டேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த மனுவை நான் திரும்ப பெற்றுக்கொள்கிறேன். மனுவினை என் சொந்த விருப்பத்தின் பேரில் யாதொரு நிர்பந்தம் இல்லாமல் திரும்ப பெறும் மனுவினை இதன் மூலம் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரர் திரு.C.ஹரிபாபு என்பவர் 27.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில்-

"ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன கட்டிடம் Basement floor–ல் வாகனம் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டிருப்பதை நேரில் கண்டதால், நான் முறைமன்ற நடுவத்திற்கு தகவல் அளித்தது தவறாக உள்ளது. இதனால் எனது சொந்த விருப்பத்தின்பேரில் நான்

அளித்த புகார் மனுவினை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்பதை இம்முறைமன்ற நடுவர் முன்னிலையில் பணிந்து சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.1853/2025/எப்1, 26.03.2026ல், " தற்பொழுது தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026–இன் பணிகள் நிமித்தம் காரணமாக ஆணையாளர் அவர்கள் முறைமன்ற விசாரணையில் கலந்து கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே ஆணையருக்கு பதிலாக நகரமைப்பு அலுவலர் விசாரணையில் கலந்து கொண்டு உரிய விவரம் வழங்க அனுமதி கோரப்பட்டதனடிப்படையில், ஆற்காடு நகராட்சி நகரமைப்பு அலுவலர் 27.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார். அதில் –

"மனுதாரர் ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன கட்டிடம் வாகனம் நிறுத்தும் வசதி செய்யப்படாமல் கட்டப்பட்டுள்ளது என்றும் அனுமதி வாங்கவில்லை என்றும் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார். ஆனால் ஆற்காடு நகராட்சியில் ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன கட்டிடத்திற்கு இரு கடைகளாக கட்ட கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அளிக்கப்பட்டுள்ள கட்டிட அனுமதிக்கு மாறாக ஒரே கடை கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது. மேலும் அனுமதிக்கு மாறாக இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு Basement floor அமைக்கப்பெறுவதால் 28.07.2025–ல் 1998ம் வருடத்திய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், (திருத்தப்பட்ட சட்டம் 35/2022), 135 (1) பிரிவின் கீழ் அறிவிப்பும் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம், 1971 சட்டப்பிரிவு பிரிவு 56(1) (b) ன்படி அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டிடத்தினை அனுமதிக்கப்பட்டபடி மாற்றி அமைக்க அறிவிப்பு நகராட்சியால் வழங்கப்பட்டது.

மேலும் அதனைத்தொடர்ந்து இறுதி அறிவிப்பு 03.03.2026–ல் ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளருக்கு நகராட்சியால் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8) 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன உரிமையாளர் திருமதி.மாலதி என்பவரின் சார்பில் மனுதாரரின் கணவர் திரு.ஆறுமுகம் என்பவர் 27.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு ஏற்கனவே, க.வி.எண்.025/CP/24–25/0001512 நாள் 10.01.2025 மற்றும் 025/CP/24–25/0001513 நாள் 10.01.2025ன்படி ஆற்காடு நகராட்சியிலிருந்து கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன் பின்னர் நகராட்சியிலிருந்து அறிவிப்பு பெறப்பட்ட பின்பு கூடுதலாக கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர், இராணிப்பேட்டை அவர்களிடம் கட்டிட வரைபட அங்கீகாரம் கோரி இணையதளம் வாயிலாக விண்ணப்பம் அளிக்க உள்ளோம்.

இந்நிலையில் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கு DTCP–க்கு விண்ணப்பம் செய்து எங்களது கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்கிறோம் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்".

9) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரின்அறிக்கை, நகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம், 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரின் சார்பில் ஆஜரான திரு.ஆறுமுகம் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் வணிக வளாகம் கட்டிடம் பொதுமக்கள் கூடும் கட்டிடம் என்பதால் 1973ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு இயக்ககத்தால் முறையான அனுமதி பெறவில்லை எனவும், தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிமம்) 1965ன் பிரிவு 2(8)ன்படி உரிமம் பெறவில்லை எனவும், வணிக வளாகம் கட்டிடம் அனுமதி இல்லாமலும், கட்டிடங்கள் இடைவெளி சுற்றிலும் விடாமல் வாகனங்களை நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி இடம் இல்லாமலும் கட்டப்பட்டுள்ளதால், சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை அகற்ற கோரியும், நகர் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56(1) மற்றும் உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 85ன் கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and seal and demolition notice அமலாக்க நடவடிக்கை எடுக்க கோரி நகராட்சி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால் நடவடிக்கை எடுக்க கோரியிருந்த நிலையில், ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன கட்டிடம் Basement floor–ல் வாகனம் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டிருப்பதை மனுதாரர் நேரில் கண்டதால், தான் முறைமன்ற நடுவத்திற்கு தவறாக புகார் அளித்து விட்டேன் என்றும், தனது சொந்த விருப்பத்தின் பேரில் தான் அளித்த புகார்மனுவினை திரும்பப்பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்திருப்பதை மனுதாரரின் கடிதங்கள் மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கப்பட்ட ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன உத்தேச வரைபடத்திற்கு TNCDBR 2019 கட்டிட விதிகளின்படி கூராய்வு செய்யப்பட்டு, கட்டிட உரிமையாணை கட்டணங்கள் கேட்பு (Building License Fees Demand)க்கான தொகை இணையவழியாக கட்டிட உரிமையாளரால் செலுத்தப்பட்ட பின்பு, கட்டிட அனுமதி எண்.025/BL/2025/00005–ல் தரைதளம் 995.94 சதுரடி மற்றும் முதல் தளம் 995.94 சதுரடி அளவில் அனுமதித்து கடை கட்டிடத்திற்கான உத்தேச வரைபட அனுமதி இணையதளம் வாயிலாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும், பத்திர ஆவணம் எண்.3617/2019 சர்வே வார்டு C, பிளாக் 4, நகரளவு எண்கள் 4/2, 5/1, 7/9D மொத்த பரப்பளவு 198.0 சதுர மீட்டர் (2130.48 சதுர அடி) இடத்தில் கடை கட்டிடம் கட்ட திருமதி.மாலதி க/பெ.ஆறுமுகம் என்பவர், சர்வே வரைபடம் மற்றும் சர்வே பதிவேடுநகல், இணையதள வில்லங்கம் சான்றிதழ் ஆகியவைகளை நகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து உத்தேச கடைகட்டிட வரைபட அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கப்பட்ட உத்தேச வரைபடத்திற்கு TNCDBR 2019 கட்டிட விதிகளின்படி கூராய்வு செய்யப்பட்டு, கட்டிட உரிமையாணை கட்டணங்கள் இணையதளவழியாக செலுத்தப்பட்ட பின்பு, கட்டிட அனுமதி எண்.025/BL/2025/00006–ல் தரைதளம் 995.25 சதுரடி மற்றும் முதல் தளம் 995.25 சதுரடி அளவில் கடை கட்டிடத்திற்கான உத்தேச வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், இருவேறு கடைகளின் உத்தேச கட்டிட வரைபட அனுமதிகளுக்கு மாறாக இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் parking செய்வதற்கேற்ப Basement floor–உடன் ஒரே கடைக்கட்டிடமாக கட்டப்பட்டு வருவதின் மீது, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022, பிரிவு 135(1) கீழ் அறிவிப்பும் மற்றும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 (விதி எண் 3(b) இன் கீழ், அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டும் கட்டிடத்தினை அனுமதிக்கப்பட்டபடி மாற்றி அமைக்க கோரும் அறிவிப்பும், கட்டிட உரிமையாளருக்கு அனுப்பி நடவடிக்கையில் உள்ளது என்பதும் ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து அறிய முடிகிறது.

ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு ஏற்கனவே, க.வி.எண்.025/CP/24–25/0001513 10.01.2025ன்படி ஆற்காடு நகராட்சியிலிருந்து கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதும், அதன் பின்னர் நகராட்சியிலிருந்து அறிவிப்பு பெறப்பட்ட பின்பு கூடுதலாக கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர், இராணிப்பேட்டை அவர்களிடம் கட்டிட வரைபட அங்கீகாரம் கோரி இணையதளம் வழியாக விண்ணப்பம் அளிக்க உள்ளதும்,

அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கு DTCP க்கு விண்ணப்பம் செய்து தங்களது கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்ளப்படும் என்பதும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் திருமதி. மாலதி என்பவரின் சார்பில் ஆஜரான அவரது கணவர் திரு.ஆறுமுகம் என்பவரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் இரண்டு கடைகள் கட்ட கட்டிட அனுமதி வழங்கப்பட்ட நிலையில் அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு, Basement floor-ல் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளதால், 1998ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135 (1), 195 (1) பிரிவின் கீழ் அறிவிப்பும் மற்றும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56(1) (b) ன்படி அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை அனுமதிக்கப்பட்டபடி மாற்றி அமைக்க ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன கட்டிடத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஆற்காடு நகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை ஏற்று, அனுமதியற்ற/அனுமதிக்குமாறாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்ச நீதிமன்றம், மாண்பமை உயர் நீதிமன்ற ஆணைகள்/தெளிவுரைகளை கருத்திற்கொண்டு உரிய தொடர்நடவடிக்கை மேற்கொள்ள ஆற்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மே திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.C.ஹரிபாபு, 21, ஹை ஸ்கூல் தெரு,
மிட்டனமல்லி, ஆவடி IAF, சென்னை–600 055.

2) நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, ஆற்காடு, ராணிப்பேட்டை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி, சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்.